**24.06.2026**

அ.வ.எண்.**46/2021**

<u>வா.சா.**4** ஏழுமலை குறுக்கு விசாரணை</u>

**1**. இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளாார்கள் என்றால் சொத்து பிரச்சனை சம்பந்தமாக தாக்கல் செய்துள்ளார்கள். தாவாசொத்தின் விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். வாதி சங்கர் என்பவர் எவ்வளவு காலமாக சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சுமார் **25** ஆண்டுகாலமாக வசித்து வருகிறார். வாதி சங்கரின் அப்பா கன்னிதாஸ் நாயுடு சென்னயைில் வசித்து வந்தரா என்றால் இல்லை, தாவாகிராமத்தில்தான் இருந்தாார். வேணுகோபால் நாயுடுவை நான் பார்க்கவில்லை. வேணுகோபால் நாயடுவுக்கு ஒரே ஒரு வாரிசு அவர் கன்னிதாச நாயுடு ஆவார். கன்னிதாச நாயுடுக்கு மொத்தம் **5** வாரிசுகள், அதில் **2** பெண்மக்கள் மற்றும் **3** ஆண் மக்கள் ஆவார்கள்.

**2**. தாவாசொத்து சம்பந்தமாக வருவாய் ஆவணங்கள் எதுவும் வேணு கோபால் மற்றும் கன்னிதாச நாயுடு பெயரில் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, அவர்களின் அனுபவத்தை மட்டும்தான் பார்த்துள்ளேன். தாவாசொத்து வேணுகோபால் நாயுடுவிற்கு சொந்தமான சொத்து என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் வேணுகோபால் நாயுடுவிற்கு மட்டும் பாத்தியமான சொத்து என்று எப்படி கூறினேன் என்றால் கன்னிதாச நாயுடு

சொல்லி தெரியும். 1ம்பிரதிவாதியின் தாயார் குப்பாபாய் அம்மாளை என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

3. கன்னிதாச நாயுடு ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன், என்ன ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் வாதிக்கு தாவாசொத்தை எழுதிக் கொடுத்தார், என்ன ஆவணம் என்று தெரியாது. எப்போது எழுதி கொடுத்தார் என்றால் 2008ம் ஆண்டு எழுதி கொடுத்தார், தேதி மாதம் ஞாபகமில்லை. எனக்கு அந்த ஆவணத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான், கன்னிதாச நாயுடு சொல்லிதான் தெரியும். குப்பாபாய் அம்மாள் வாதி மீதும் மற்றும் மனோகரன் மீதும் இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார், அந்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியாது.

4. வாதி சங்கரிடம் யார் தகராறு செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள்தான் தகராறு செய்தார்கள், ஆனால் அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. எனது பூர்வீகம் கிராமம் தாவாகிராமமா என்றால் இல்லை, செம்பூண்டிதான் எனது பூர்வீகம் கிராமம் அங்கிருந்து தாவாகிராமத்திற்கு குடியேறிவிட்டேன். எப்போது குடியேறினேன் என்றால் சுமார் 40 வருடத்திற்கு முன்பு குடியேறினேன். எனக்கும் கன்னிதாச நாயுடு என்பவருக்கும் எப்படி பழக்கம் என்றால் எனது நிலத்திற்கு பக்கத்து நிலக்காரர், நான் எனது நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நான் வாதி அழைத்ததன் பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்தேன். இந்த

வழக்கின் சொத்து குறித்த விவரங்கள் தெரியாமலும், வழக்கின் தரப்பினர்களை பற்றி தெரியாமலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.